A. மணிமண்டபத்து வாசலில்

B. ஆ.

A. நீங்களோர்கள் ஏழுபேரு....

B. ஏழுபேரு...

A. "பாரியில் வெச் சேவகா!

B. ஆ.

A. ஆசாரி ஏழுவீட்டுக்காரரு வந்திருக்கிறீங்களா?"

B. "வந்துட்டாங்க"

A. சாமி, வந்து மணிமண்டபத்து வாசலில் மின்னால நிக்கிறாங்க."

B. ஆ.

A. பருவதியா

B. ஆ.

பாட்டு:-

A. இட்டாளே முக்காடு
ம் அங்கே அடவடுகே தெரியாமல்

B. அந்தப்போட்டாளே முக்காடு

A. அங்கை அன்னக்கொடி பத்தினியே

B. அங்கை பிறவடுகு தெரியாமே

A. காராளேந் தேவியவோ

B. இந்த ஆமாமா தேவியவோ

A. ஏ அங்கை கன்னிப்பட்டம் தப்பாது

B. அந்தக் காராளே தேவியல்ல

A. இனி ஆமாமாந் தேவியவோ

B. அந்தக் கன்னிப்பட்டம் தப்பாது

A. அங்கை தங்கமின்கிக் காரருகோ

*about 1 min. and 25 sec.*

B. ஆமாமா காரருக
A. சாமி அங்கே தரணிபட்டம் ஆண்டவர்கள்
B. தங்கமிஞ்சிக் காரரய்யா
A. ஆமாமாங் காரருகோ
B. அங்கே தரணிபட்டம் ஆண்டவுக
A. ஏ அங்கை பொன்னு மிஞ்சிக் காரருகோ
B. ஆமாமா காரருக
A. சாமி அங்கை பூமிபட்டம் ஆண்டவர்கள்
B. அந்த பொன்னுமிஞ்சிக் காரருக
A. ஆமாமாங் காரருகோ
B. அந்தப் பூமிபட்டம் ஆண்டவுக /

A. பத்தினியா வெளிமுகம் வரும் போது
B. ஆ.
A. ஆசாரி ஏழு பேரும்
B. ஆ.

பாட்டு =

*about 23 sec.*

A. அட்டம் பணியுறரே
B. ஆமாமா பணியிறரே
A. பத்தினிக்கி ஆளுமை செய்யுறரே
B. அட சரணஞ் சரணமென்று
A. ஏ அங்கே ஆசாரி ஏழு பேரும்
B. அங்கை சாஷ்டாங்கம் செய்யினனே /

A. "அப்பா ஆசாரி!
B. ஆ.
A. சரணமென்ற பேர்களுக்கு வரணமொரு =
B. நானுமின்னு...

A. "அப்பா, ஆசாரி ஏழு வீட்டுக்காரடு வந்திருக்கிறீங்களா?"

B. ஆ.

A. "சாமி வந்திருக்கறமுங். ராஜாங்கத்திலெ எந்த வேலெ உத்தரவாகுதுங்களா?"

B. ஆ.

A. "அப்பா ஆசாரி

B. ஆ.

A. உங்கட்டெ உள்ள சங்கதியெச் சொல்லறெ. நான், கலியாணஞ் செய்து நாப்பத்தஞ்சு வருஷமாகுது.

B. ஆ.

A. வாளவந்தி நாட்டிலிருந்து பொன்னிவள நாட்டுக்கு வந்து.

B. ஆ.

A. இன்னும் நான் பிறந்தவன் வீட்டுக்கு வாளவந்தி நாட்டுக்குப் போகுலெ.

B. ஆ.

A. அது நம்முளுக்கு குழந்தையில்லெ, நாப்பத்தஞ்சு வருஷமா.

B. ஆ.

A. அதனாலெ வாளவந்தி நாட்டுலெ மறிக்கொழுந்தாக் கவுண்டருக்கும், சிவக்கொழுந்தா கவுண்டர் இரண்டு பேருக்கும் ஒர்றொருத்தருக்கு எவ்வெழு குழந்தை, பதிஞ்சு குழந்தையிருக்குது.

B. ஆ.

A. நாம போன உடனெ அத்தை வந்துட்டாங்கன்னு

B. ஆ.

A. தெரியாந்து பார்க்கும்.

B. ஆ.

A. கொஞ்சம் பணிதியான நகை செய்ய வேணும்.

B. சரி.

A. நகை செய்து

B. ஆ.

A· போன உடனே கழுத்துலெ போட்டு
B· ஆ.
A· அதுக்கு போடற பக்கமெல்லாம் போட்டா,
B· ஆ.
A· நம்ம அத்தை வாங்கீட்டு வந்திருக்காங்கின்னு
B· ஆ.
A· ரம்ப சந்தோசமாயிருக்கும்
B· ஆ.
A· அதுக்குத்தான் உங்களெ வரவழைத்து
B· ஆ.
A· கொஞ்சம் பணிதியான நகை செய்யலாமென்று
B· ஆகா.
A· வரவழைத்தேசாமி....
B· ஆசாமி...
A· "சாமி அப்படியே நல்லதென்று" அன்புடன் சொன்னார்கள்...
B· சொன்னாரே...
A· "அப்பா, ஆசாரி!
B· ஆ.
A· நம்ம இந்தா ஏடு வாங்கிக்கி எடுத்து வண்ணை -
சாவடியிலெ பட்டறைய வெச்சு ஒரு உதை,
B· ஆ.
A· நான் பெஞ்சியெப் போட்டு உக்கார்ரெ
B· ஆ.
A· சொல்லச் சொல்ல நல்ல பணிதியான நகை செய்யறயா?"
B· சரி.
A· "நல்லதுங்க ராஜாவே"...
B· ராஜாவே...

A. "அடி பெட்ட, இங்கை வா!

B. ஆ.

A. ஒரு வள்ள முத்தளந்தாந்து ஆசாரிகிட்டைக் குடு!"

B. ஆ.

A. அப்படியெ நல்லதென்று அன்புடனே கொண்டாந்தா...

B. கொண்டாந்தா..

A. பவெரியா ஒரு பெஞ்சியைப் போட்டுக்காந்து கெழக்கு முகமாக,

B. ஆ.

A. ஆசாரி பட்டறையை வெச்சு ஒரு ஊதி,

B. ஆ.

A. அராவது நவரத்தினங்களை

B. ஆ.

A. உருக்கும் போது

B. ஆ.

பாட்டு:-

about 56 sec.

A. அங்கம் உருகுதடா உருகுதடா ய்யய்யோ
அங்கம் உருகுதடா

B. அங்கம் உருகுதடா உருகுதடா
அங்கம் உருகுதடா

A. ஆசாரி ஆசாரி

B. பட்டறையால் பட்டறையால்...

A. ஆ... ஆ... தங்கம் உருகுதடா உருகுதய் ய்யய்யோ
தங்கம் உருகுதடா

B. உருகுதடா உருகுதடா
தங்கம் உருகுதடா உருகு.

A. உருகுதடா உருகுதடா

தட்டானுட தட்டானுட பட்டறையில் பட்டறையில் ய்யய்யோ
தங்கம் உருகுதேடா

B. தங்கம் உருகுதேடா உருகுதய்யா
தங்கம் உருகுதேடா

A. உருகுதேடா உருகுதேடா...

B. ஆ தட்டானுட பட்டறையில் பட்டறையில்

A. தங்கத்தைக் காச்சி தருடா அச்சு கம்பியா நீட்டி

B. ஆ.

A. "ராஜாவே!

B. ஆ.

A. என்ன நகை செய்யறதுங்க?"

B. ஆ.

A. "ஆசாரி!

B. ஆ.

பாட்டு:-

A. இடுப்புக்கு ஒட்டியாணம் ஒட்டியாணம்
அப்பா இடுப்புக்கு ஒட்டியாணம்

B. இடுப்புக்கு ஒட்டியாணம் ஒட்டியாணம்

about 27 sec.

A. இருபுறமும் பொன்சலங்கை செய்யுமப்பா
இடுப்புக்கு ஒட்டியாணம்

B. இடுப்புக்கு ஒட்டியாணம் ஒட்டியாண...

A. ஆ....

B. இருபுறமும் சங்கிலியை தொங்கவெய்யா

A· ஆசாரி கிடைப்புக்கு ஒட்டியாணம்

B· ஆ.

A· கிடைபுறமும் வைரமணி

B· ஆ.

A· "செய்தயா ஆசாரி....

B· ஆசாரி...

A· "அந்தா அப்படியே செய்திருக்கிறனுங்க."

B· ஆ.

A· "ஆசாரி!

B· ஆ.

பாட்டு:-

↓

A. மார்புக்கு மார்பதக்கம்
மார்பதக்கம் ஆ-ஆ..
{மார்புக்கு மார்பதக்கம்

About 28 sec.

B· மார்புக்கு மார்ப் பதக்கம் மார்ப் பதக்..ம்..

A· வைரமணி இண்டுகளும் செய்யுமப்பா...ஆ...

{மார்புக்கு மார்பதக்கம்

B· மார்புக்கு மார்பதக்கம் ~~[illegible]~~ மார்ப் பதக்க..ஆ..

மார்புக்கு
{

A· மார்புக்கு மார்ப் பதக்கம்,

↑ B· வைரமணி செய்யுமப்பா...ஆ...

A· ஆசாரி செய்து போட்டயா?"

B· ஆ.

A· "சாமி, செய்து போட்டனுங்க."

B· ஆ.

A. "ஆசாரி!

B. ஆ.

பாட்டு:-

A. கழுத்துக்கு வெற்றிலச்சரம்
வெற்றிலச்சரம் -- ஆ...

B. கழுத்துக்கு வெற்றிலச்சரம்

B. கழுத்துக்கு வெற்றில சரமுமெய்யா...

A. கணக்காக கணக்காக செய்யுமப்பா
ஆசாரி... யய்யா...

B. ஆ.. கழுத்துக்கு வெற்றில சரமுமெய்யா
கழுத்துக்கு வெற்றில

A. வெற்றில வெற்றிலச் சரோ

B. ஆ.. கணக்காக செய்யுமெ ஆசாரி....

A. ஆ.... ஆ....

about 33 sec.

ஆசாரி!

B. ஆ.

A. கழுத்துக்கு வெற்றிலச்சரம்

B. ஆ.

A. செய்திட்டயா?"

B. ஆ.

A. "ராஜாவே, செய்து போட்டுருங்க."

B. ஆ.

A. "ஆசாரி!

B. ஆ.

பாட்டு:-

A. உச்சிக்கி உச்சிப்பூவு
உச்சிப்பூவு யயாய்யா
உச்சிக்கி

about 27 sec.

B. — ய்யா உச்சிக்கி உச்சிப்பூவு

உச்சிப்பூவு....

A. ஒழுங்காக செய்யுமப்பா ஆசாரி. ய்யாய் யோ

B. — ய்யா உச்சிக்கி உச்சிப்பூவு

உச்சிப்பூவு...

A. ஆ... ஒழுங்காக செய்யுமப்பா

B. செய்யுமய்யா ஆசாரி....

A. "சாமி, அப்படியே செய்திருக்கறனுங்க."

B. ஆ.

A. "ஆசாரி!

B. ஆ.

பாட்டு:-

about 33 sec.

A. சடைக்கிச் சடை வில்லியும்

சடை வில்லியே ய்யாய் யோ

சடைக்கித்தா

B. ய்ய சடைக்கித்தா சடை வில்லி

சடை வில்லி...

A. சரியாக சரியாக செய்யுமப்பா ஆசாரி ய்யாய் யோ

B. — ய்யா சடைக்கித்தாரு சடை வில்லி ஆசாரி

சடைக்கித்தா

A. சடை வில்லியாம் சடை வில்லியா

B. சரியாக செய்யுமே ஆசாரி

சரியாக செய்யுமே

A. செய்யுமப்பா ஆசாரி...

B. ம்... ம்...

A. ஆசாரி, செய்து முடிஞ்சுதா? "

B. [illegible] ஆ.

A. " முடிஞ்சுதுங்க. "

B. ஆ.

A. " ஆசாரி!

பாட்டு:

பத்து விரலுக்கெல்லாம்
விரலுக்கெல்லா... ஆ...ஆ..
பத்தா விரலுக் கெல்லாம்

B. விரலுக்கெல்லாம் விரலுக்கெல்லா... ஆ...

A. பஞ்சலோக கணையாழி செய்யுமப்பா ஐயயா
பத்து விரலுக் கெல்லா

B. பத்தா விரலுக்கு விரலுக்குமே

A. பஞ்சலோக கணையாழி செய்யுமப்பா... ஆ...

about 26 sec.

ஆசாரி!

B. ஆ.

A. சடைக்கிச்சடை வில்லை

B. ஆ.

A. சரியாகச் செய்திட்டியா?

B. செய்திட்டியா...?

A. பத்துவிரலுக்கு பதிஞ்சதொங்கக்கணையாழி
எட்டுவிரலுக்கு இசைந்ததொங்கக்கணையாழி
B. கணையாழி..."
A." ராஜாவே, செரியாக செய்திட்டனுங்க."
B. ஆ.
A." அடகுப்பி, இங்கெவா!
B. ஆ.
A. ரண்டு பெட்டியெடுத்துக் கொண்டு, வா!
B. ஆ.
A. இந்த் இந்தப் பணிதியெல்லா பெட்டிலெ போட்டு
B. ஆ.
A. சீல்ப் போட்டு விடுங்களை...
B. வைங்களை...
A. குப்பி
B. ஆ.
A. பத்துபோ தருகிறேன்
B. ஆ.
A. சொக்கரு செட்டியாரு கடையெ போய
B. ஆ.
A. பழ ரண்டு போயைலெ
B. ஆ.
A. பொட்டியால்,
B. ஆ.
A. பணிரண்டு பொட்டியால்,
B. ஆ.
A. அமா.
B. ஆ.

A· அப்ரொ, அந்தக் கொழந்தைக வந்தொடனெ

B· ஆ.

A· பாடிகளு, ரவிக்கைகளு மெக்கேதல்லொ

B· ஆ.

A· அதுக ரண்டு பொட்டியல் வேண்டும்.

B· ஆ.

A· நாலு பொட்டிச் சாமானம்

B· ஆ.

A· சரியாக வாங்கிவாடி....

B· வாங்கி வாடி... "

A· குப்பி அடி சொக்கன் செட்டியாரு கடையெ

போயி,

B· ஆ.

A· வேணுமிங்கற சாமானம் வாங்கிக் கொண்டு வந்து

B· ஆ.

A· ஆறுபொட்டி சாமானம்

B· ஆ.

A· சரியா அடுக்கியெட்டா...

B· அடுக்கி வெட்டா...

A· பட்டு ரண்டு போலையிலெ,

B· ஆ.

A· பணிதி ரண்டு பொலையிலெ,

B· ஆ.

A· பழ ரண்டு போலையிலெ

B· ஆ.

A· ஆறு பொட்டிலெ ஆறு சாமானம் சரியாகப் போட்டு

B· ஆ.

A. சீல்ப் போட்டு வைத்தாங்க...

B. வைத்தாளே...

A. "அழ மாதர்களை

B. ஆ.

A. நான் என்னுடைய நாதனிடம் சென்று,

B. ஆ.

A. அவரை உத்தரவு கேட்டு வருகிறேன்.

B. ஆ.

A. வர்றதுக்குள்ளாக

B. ஆ.

A. சேவுகர் ஆறுபேருக்கும்

B. ஆ.

A. சாப்பாடு நெறையாப் போடுங்க.

B. செரி.

A. நெறையாப் போட்டு தாம்பூலங் கொடுத்திடுங்கள்.

B. ஆ.

A. நான் சீக்கிரம் என்னுடைய

B. ஆ.

A. சாமியெக் கண்டு வருகிறேன்" என்று

B. ஆ.

A. பருவதியா

B. ஆ.

A. இட்டாளே முக்காடு இட வகுடு தெரியாமல்

~~போட்டு~~ போட்டாளே முக்காடு பிற வகுடு தெரி(ய)

B. தெரியாமே...

A. அன்ன நடை நடந்தா அபரணந்தானையைய..

B. தானையைய...

A. ரேணி பட்டக சாமிக்ளே வந்து பார்க்கறபோது

B. ஆ.

A. ஒன் சாமி,

B. ஆ.

A. உன்னுடைய ராஜதுரை கோடையிழ மணிவேந்தே...

B. மணிவேந்தே...

A. பெண்மொழிக்காரர் பேசாந்திரு முடியார்

B. ஆ.

A. மேக்கெ தலையெ வெச்சு, கிழக்கை காலை நீட்டி

B. ஆ.

A. தூங்குறோர் ராஜதுரை....

B. ராஜதுரை...

A. காங்கேரி வந்து

B. ஆ.

A. கால் மாட்டில் நின்று,

B. ஆ.

A. "நாதா! நாதா!

B. ஆ.

A. நாதா!" என்று

B. ஆ.

A. மூன்று தரம் கூப்பிட்டாளே....

B. கூப்பிட்டாளே...

A. "ஏன், பெண்ணே?"

B. ஆ.

A. என்று திக்குன்னு எந்திருச்சு திடுகத்தைத் தான் துடைத்தார்...

B. தான் துடைத்தார்..

A. "நாதா!

B. ம்.

A. இப்பதான் தூங்கித் தானுங்க நம்ம பொழப்பு தூங்கிப்-போயிட்டு தூங்க."

B. ஆ.

A. கழுதை முண்டே! செருப்புல பேச்சுப் போவேம் பாத்துக்க இல்லாத சேட்டை மயிரு பண்ணுனீன்னு! எதுலெ பார்த்தாலு தூங்கறயா? உனக்கு கைகென்ன ரெண்டு நாளைக்கி இருக்கற வரைக்கி

B. ஆ.

A. உப்பாறப் புளியாறச் சாப்புட்டேட்டு

B. ஆ.

A. மீதமிருந்தா யாரோ தின்னுட்டுப் போறாங்க. இதுக்காக உன்னைப்போல் சும்மா வந்து வந்துன்னு அச்சுக்கச் சொல்றயா?

B. ஆ.

A. குழந்தையில்லேன்னு குட்டியில்லேன்னு அதுக்காக சோறு இல்லாமெக் கெடந்தா உயிரு இருக்குமோ?

B. ஆ.

A. நான் இஷ்டம்போல வேத்தாக் குளிக்குக்கெவெ பசிக்கா சாப்புடுவெ. என்னேரம் பாக்குட்டு நீ

நொடுக்கு நொடுக்கென்னு இதே வேலையாப் போச்சா? இப்ப
நாந் தூங்கித்தே உம்பட பொழப்புப் போச்சா?

B. ஆ.

A. உங்கொப்பமூட்டிலிருந்து கொண்டாறயா, நிய்யி?
எல்லா ~~[illegible]~~ நாஞ் சம்பாரிச்சதுன்னு"

B. ஆ.

A. அங்கெ வாய்பேசாத் தமெர் மசைச்சாமி ஒன்னுடையார்
சொல்லுகிறாரன்னெரா...

B. அந்நேரம்...

A. "இப்பெதுக்கு பத்தினியாட்ட வந்து அழைக்கிறெ இப்ப நிய்யி?"

B. ஆ.

A. "நாதா!

B. ஆ.

A. தங்கநிட்டெ நா சொன்னதுங்களை போயிட்டு வாரமின்னு"
"அகோ, மறுக்கா மறுபடியி நெனைச்சுக்கிட்டியா

B. ஆ.

A. சண்டாளி, அங்கெ போனது அநேகமான கெதியெல்லா நடக்கேமே
அதை மறந்திட்டியா?"

B. ஆ.

A. "நாதா, இப்ப நாம்போயிட்டா

B. ஆ.

A. 'நாப்பத்தஞ்சு வருஷத்திக்கிம் பின்னலே

B. ஆ.

A. பிறந்தவ வந்திட்டான்னு'

B. ஆ.

A. அட்டாணிமேலெ கொண்டு வெப்பாங்க.

B. ஆ.

A. வீட்டுக்குமேலெ எடுத்து வெச்சிருப்பாங்க

B. ஆ.

A. பாவெ (பாயை) விரிச்சு உக்கார வெப்பாங்க. பெஞ்சிலெ வெப்பாங்க. நா, இப்பப் போயாட்டா அப்பிடி வெச்சிருப்பாங்க."

B. செரி.

A. "அதெல்லா வெக்கிறதெ நாம்பாத்திருக்கறெ.

B. ஆ.

A. அல்லெ உனக்கு போறதுக்கு உனக்கு என்னைந்தான் போலிருக்குது".

B. ஆ. ஆ.

A. "என்னமோ நாதா

B. ஆ.

A. ஒரு நாளைக்கி போய்ப் பாக்கலா கண்ணுலெ பாக்கலா நானு

B. ஆ.

A. குழந்தையில்லாத பாவியா இருக்கறனுங்க நாதா.

B. ஆ புறப்படு

A. கண்ணுலெ பாத்திட்டு களிதீந்து

B. ஆ.

A. வருவெனுங்க எஞ்சாமி"...

B. எஞ்சாமி...

A. பெண்ணே!

B. ஆ.

A. அதை போயாட்டுத்தே வரவேண்டுமா?"

B. ஆ.

A. "ஆமாங்க, நாதா. நாப்பத்தஞ்சு வருஷமாச்சுதுங்க.

B. ஆ.

A. நா, உன்னைஞ்சு கண்ணுல பார்த்துட்டு வர்றனுங்க. "

B. ஆ.

A. " ஏம்பொண்ணே, நீ போயிட்டா எனக்கு சாதம் யாரு போடுவா? "

B. ஆ.

A. " நாதா !

B. ஆ.

A. பதினாறு மாதர்களிருக்கறாங்க தாங்கள் வெந்தா(வெந்நீரா)க் குளிச்சுக்குங், பசிச்சாச் சாப்பிடுங் என்னையும் ஜாக்கிரதையாக போடச் சொல்றனுங்."

B. ஆ.

A. " என்னிருந்தாலு அப்பவ நீயிருக்கற மாதிரி இருக்குமா?

B. ஆ.

A. எந்தநேரம் வந்தாலும் சாமி வந்தாரா? வெந்நீர் குளிச்சுக்கிட்டாரா? சாப்பிட்டாரான்னு கேப்பயே,

B. ஆ.

A. கேப்பயே

B. ஆ.

A. நீ போயிட்டா அந்த மாதரை அவெல்லா இருப்பாளா? "

B. ஆ.

A. அப்பிடீங்கறபோது

B. ஆ.

A தாமரைக்கி கொஞ்சம் ஆத்திரம் வந்துட்டதே…

B. வந்துதய்யா…

A. "நாதா!

B. ஆ.

பாட்டு:-

A. மண்ணை விட்டு எஞ்சாமி
மரம் போகுமோ நாதா மரம் போகுமோ

B. ஐயா மரம் போகுமோ நாதா
மரம் போகுமோ

A. நாதா அங்கே மரத்தை விட்டு சாமி
மரத்தை விட்டு நிழல் போகுமோ நாதா
நிழல் போகுமோ

B. அங்கே மண்ணை விட்டு மண்ணை விட்டு
மரம் போகுமோ நாதா மரம் போகுமோ

A. இனி அடிகிளை அங்கு அன்னக்கொடி

B. அங்கே மரத்தை விட்டு மரத்தை விட்டு
நிழல் போகுமோ நாதா நிழல் போகுமோ

A. சாமி அங்கு பொன்னை விட்டு சாமி
பொன்னை விட்டு நிறம் போகுமோ சாமி
நிறம் போகுமோ

B. ஐயா மாயவனே நல்ல ஜோதி தெய்வே

A. நாதா அந்த பூவை விட்டு பூவை விட்டு
மணம் போகுமோ நாதா மணம் போகுமோ

B. அங்கே பொன்னை விட்டு பொன்னை விட்டு
நிறம் போகுமோ நாதா நிறம் போகுமோ

about 2 min. and 23 sec.

A. இனி அழுகிறேனே அங்கே காந்தேரி

B. அங்கே பூவை விட்டு நாதா

மணம் போகுமோ நாதா மணம் போகுமோ

A. நாதா அங்கே உங்களை விட்டு நல்லோ

நான் பிரிய ஐயோ நான் பிரிய

B. ஐயா காந்தேரி நல்ல நாயகியா

A. இனி அழுகிறேனே அழுகிறேனே

காந்தேரி அங்கே காந்தேரி

B. அங்கே சொல்லாதே தாமரையா

சொல்லுறேனே நாதா சொல்லுறேனே

A. ஏ அன்னக்கொடி அங்கே விளையாடு,

B. அங்கே சொர்ணக்கிளி தாமரையா

வாங்குறேனே காந்தா வாங்குறேனே

A. மண்ணை விட்டு மரம் போகுமோ மரத்தை விட்டு நிழல் போகுமோ...

B. நிழல் போகுமோ....

A. நாதா, பொன்னை விட்டு நிறம் போகுமோ பூவை விட்டு மணம் போகுமோ...

B. மணம் போகுமோ...

A. உங்களை விட்டு நான் பிரிய

B. ஆ.

A. என்தலையில் எழுதினதே...

B. எழுதினதே...

A. நாதா!

B. ஆ.